## 74.1% இந்தியர்களால் ஆரோக்கியமான உணவைப் பெற முடியவில்லை: FAO அறிக்கை



**புதுடெல்லி:** கடந்த 2021 ஆம் ஆண்டில் 74.1 சதவீத இந்தியர்களால் ஆரோக்கியமான உணவைப் பெற முடியவில்லை என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) தெரிவித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் ஆரோக்கியமான உணவைப் பெற முடிந்தவர்களில் எண்ணிக்கை 76.2 சதவீதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரோக்கியமான உணவைப் பெறும் தகுதி பாகிஸ்தானில் 82.2 சதவீத மக்களிடமும், வங்கதேசத்தில் 66.1 சதவீத மக்களிடமும் இல்லை என்றும் அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.வ்இதற்கும் அதிகரிக்கும் உணவின் விலை அல்லது விலைவாசிக்கு ஏற்ற ஊதிய உயர்வு இல்லாமையே காரணம் எனக் கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வெளியிட்டுள்ள இந்த அறிக்கைக்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான பிராந்திய கண்ணோட்டம் 2023: புள்ளியியல் மற்றும் போக்குகள் (Regional Overview of Food Security and Nutrition 2023: Statistics and Trends) எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் பல்வேறு முக்கிய புள்ளிவிவரங்கள் இடம்பெற்றுள்ளன. அதன்படி, உணவின் விலை உயர்வதும், சம்பள உயர்வு ஏற்படுவது தடைபடுவதும் தொடர்ந்து நீடித்தால் ஆரோக்கியமான உணவைப் பெற இயலாமல் இன்னும் இன்னும் அதிகமானோர் பாதிக்கப்படக்கூடும் எனத் தெரியவருகிறது.

கரோனா பெருந்தொற்று காலத்தில் உணவு, கால்நடைத் தீவனம், எரிபொருள், உரங்கள், நிதி என ஐந்து விஷயங்களில் ஆசிய, பசிபிக் பிராந்தியம் கடுமையான நெருக்கடியை சந்தித்தது. இன்னமும்கூட சில பிராந்தியங்களில் நீடித்த தாக்கம் இருக்கின்றது. இந்தப் பிராந்தியத்தில் மட்டும் இப்போது 370.7 மில்லியன் மக்கள் போதிய ஊட்டச்சத்து இல்லாமல் தவிக்கின்றனர். இது உலகளவில் ஊட்டச்சத்தான உணவு கிடைக்காமல் தவிப்போரின் எண்ணிக்கையில் பாதியளவாகும் என்று கூறுகின்றது அறிக்கை.

உணவு பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டோரில் ஆண்களைவிட பெண்களே அதிகம் என்றும், இனப்பெருக்க வயதில் உள்ள பெண்கள் மத்தியிலேயே ரத்த சோகை அதிகமாக இருப்பதாகவும் கூறுகின்றது.

குறிப்பாக, இந்திய மக்கள் தொகையில் 16.6 சதவீதம் பேர் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் தாக்கம் உடல்நலன் தாண்டி பொருளாதார, சமூக பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றது. இருப்பினும் 2015 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை ஒப்பிடுகையில் இந்தியாவில் இது சற்றே குறைந்துள்ளதாம்.

ஆசிய கண்டத்தைப் பொறுத்தவரையில் தெற்காசியாவில் உணவு பாதுகாப்பின்மை அதிகம்தான் என்றாலும் கூட கிழக்கு ஆசியாவிலேயே இது அதிகம் எனத் தெரிகிறது.

இந்தியாவைப் பொறுத்த வரையில், 5 வயதுக்கும் குறைவான குழந்தைகளில் 31.7 சதவீதம் குழந்தைகள் வளர்ச்சி குன்றியவர்களாக (ஸ்டன்டட் குரோத் உடையவர்களாக) உள்ளனர். வயதுக்கு ஏற்ற வளர்ச்சி (அதாவது போதிய உயரம், உடல் எடை) இல்லாதவர்கள் எண்ணிக்கை ஆசியாவிலேயே இந்தியாவில்தான்

18.7% என்றளவில் அதிகமாக உள்ளது. அதேவேளையில் 5 வயதுக்குக் குறைவான குழந்தைகளில் 2.8% பேர் அளவுக்கு அதிகமான உடல் எடையோடு இருக்கின்றனர். அதுவும் ஆரோக்கியமான குழந்தைப் பருவத்துக்கு அச்சுறுத்தலானதே என அறிக்கை குறிப்பிடுகின்றது.

இந்தியாவில் 15 முதல் 49 வயது வரையிலான பெண்களில் 53 சதவீதம் பேர் ரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை கூறுகின்றது. அதேபோல் தேசத்தில் 1.6 சதவீத பெரியவர்கள் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக பல்வேறு முக்கியமான புள்ளிவிவரங்களையும் உள்ளடக்கியதாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) அறிக்கை வெளியாகியுள்ளது.

## டெல்லி ஜே.என்.யு. வளாகத்தில் திருவள்ளுவர் சிலை: பல்கலைக்கழக துணைவேந்தர் சாந்திஸ்ரீ தகவல்




**புதுடெல்லி:** டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக (ஜே.என்.யு.) வளாகத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் என துணைவேந்தர் சாந்திஸ்ரீ து.பண்டிட் அறிவித்தார்.

இந்தியாவில் முற்போக்கு சிந்தனை மிக்க பல்கலைக்கழகமாகக் கருதப்படுவது டெல்லி ஜேஎன்யு. சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு வரை, இதில் பயிலும் மாணவர்கள் சிவப்பு சிந்தனையாளர்களாக உருவாகி விடுவதாகவும் ஒரு கருத்து

நிலவியது. இங்கு தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து மாணவ, மாணவிகள் கல்வி பயில்கின்றனர். இவர்களில் வடக்கு மற்றும் தென் மாநில மாணவர்கள் இடையே சில கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகப் புகார்கள் உண்டு. இதை போக்கும் முயற்சியில் அங்கு திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பு அங்கு நடைபெற்ற பாரதி பிறந்தநாள் விழாவில் வெளியானது.

மத்தியப் பல்கலைக்கழகமான இதன் சிறப்புநிலை தமிழ்த்துறை சார்பில் மகாகவி பாரதியாரின் 142-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. பாரதியின் பிறந்த நாளை, இந்திய மொழிகள் தினமாக நாடு முழுவதிலும் கொண்டாட வேண்டும் என கடந்த வருடம் மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்திருந்தது. இதுவும் நேற்று முன்தினம் ஜேஎன்யுவில் கடைப்பிடிக்கப்பட்டது.

பாரதி பிறந்தநாள் விழாவில் மத்திய அரசின் முதன்மைச் சட்ட ஆலோசகர் இரா.வெங்கடரமணி, உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இதில், பாரதியாரின் திருவுருப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

விழாவில் ஜேஎன்யு துணைவேந்தர் சாந்திஸ்ரீ து.பண்டிட் பேசும்போது, "ஜேஎன்யு பல்கலைக்கழகம் வடக்கு, தெற்கு எனும் வேறுபாடுகளைக் கடந்து இந்தியாஎனும் நிலையில் இயங்க வேண்டும். இதனைப் பறைசாற்றும் விதமாக விரைவில் பல்கலைக்கழக வளாகத்தில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட உள்ளது" என்றார்.

இந்திய அரசின் முதன்மைச் சட்ட ஆலோசகர் இரா. வெங்கடரமணி பேசுகையில், "வாழிய பாரத மணித்திரு நாடு எனப்பாடி இந்திய ஒற்றுமையை தன் பாடல்களில் பாரதி வலியுறுத்தினார். பாரதியின் பாடல்களில் பெண் விடுதலை, சமத்துவம் ஆகியன வெளிப்பட்டன. பாரதியின் இக்கொள்கைகளையே நீதிமன்றங்கள் இன்றளவும் நிறைவேற்றி வருகின்றன" எனக் குறிப்பிட்டார்.

சிறப்புரையாற்றிய உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி.
வெ.இராமசுப்பிரமணியன், “பாரதி 7 மொழிகள் அறிந்தவர், தான் வாழ்ந்த குறுகிய காலத்திலேயே ஊடகவியலாளர், கட்டுரையாளர், விடுதலைப் போராட்ட வீரர், புலவர், ஆசிரியர் உள்ளிட்ட பல அவதாரங்களை எடுத்தவர். கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகியவற்றை பாரதி சிறப்புற எடுத்துரைத்தார். பாரதியின் படைப்புகளில் ‘பாஞ்சாலி சபதம்’ தனித்தன்மை வாய்ந்தது ஆகும். பாரதியின் அளவுக்கு ‘அத்வைதத்தை’ உள்வாங்கியவர்கள் யாருமில்லை” எனத் தெரிவித்தார்.

## கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டி: பிளேடு ஓட்டத்தில் தங்கம் வென்றார் ராஜேஷ்




**புதுடெல்லி:** முதலாவது கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் டெல்லியில் நடைபெற்று வருகிறது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த பிளேடு ஓட்டப்பந்தய வீரரான கே.ராஜேஷ் 200 மீட்டர் ஓட்டத்தில் (டி 64 பிரிவு) கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வென்றுள்ளார். மேலும் நீளம் தாண்டுதலில் 5-வது இடத்தை பிடித்தார். ராஜேஷ் சென்னை அடுத்த தாம்பரத்தில் உள்ள அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் பயின்று வருகிறார்.

10 மாத குழந்தையாக இருக்கும் போது ராஜேஷ் தனது காலை இழந்துள்ளார். அவரது கால்களில் ஏற்பட்ட தொற்று காரணமாக பெற்றோர் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு மருந்து செலுத்தும் போது, காலில் ஊசி உடைந்து விஷம் பரவி உள்ளது. இதையடுத்து அவருடைய உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள் காலை துண்டித்துள்ளனர்.

குழந்தை பருவத்திலேயே காலை இழந்தாலும் ராஜேஷ் நம்பிக்கையை இழக்கவில்லை. செயற்கை காலுடன் வாழ்க்கை பாதையில் பயணித்த நிலையில் 7-ம் வகுப்பு படிக்கும் போது அவரது பெற்றோர் பிரிந்து சென்றுவிட்டனர். அதன் பின்னர் அவரையும், இரட்டை சகோதரரையும் தாத்தா, பாட்டி வளர்த்துள்ளனர். ராஜேஷின் தாத்தா ஆட்டோ ஓட்டுநராக உள்ளார். தனது வருமானத்தில் பேரன்கள் இருவரையும் கவனித்து வந்துள்ளார்.

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற ராஜேஷ் கூறும்போது, “2016-ம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டியில் மாரியப்பன் தங்கவேலு உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்றதை டி.வி-யில் பார்த்தேன். அப்போது எனக்கு ஒரு உந்துதல் ஏற்பட்டது. நானும் அவரை போன்று பாராலிம்பிக்கில் பங்கேற்று நாட்டுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று கருதினேன்.

இதைத் தொடர்ந்து 2018-ம் ஆண்டு முதல் பிளேடு அணிந்து கொண்டு ஓட்ட பயிற்சிகளை தொடங்கினேன். நீளம் தாண்டுதல் பிரிவில் உலக சாதனை படைத்த ஜெர்மன் பாரா நீளம் தாண்டுதல் வீரர் மார்கஸ் ரெஹ்மைப் போல இருக்க விரும்புகிறேன். இதுவரை இரு முறை தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். கடந்த மார்ச் மாதம் புனேவில் நடைபெற்ற 21-வது தேசிய பாரா போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றேன்.

இதன் பின்னர் தமிழக அரசு எனக்கு ரூ.7.50 லட்சம் மதிப்புள்ள புதிய பிளேடுகளை வழங்கியது. பாராலிம்பிக் மற்றும் பாரா ஆசிய விளையாட்டு போட்டியில் பங்கேற்று நாட்டுக்காக பதக்கம் வெல்ல விரும்புகிறேன்.

வரும் ஜனவரி 9 முதல் 15-ம் தேதி வரை கோவாவில் நடைபெற உள்ள தேசிய பாரா விளையாட்டு போட்டிக்காக தீவிரமாக தயாராகி வருகிறேன். இதன் பின்னர்

பிப்ரவரியில் துபாயில் நடைபெறஉள்ள கிராண்ட் பிரிக்ஸ் போட்டிக்கு என்னை தயார்படுத்திக் கொள்வேன்" என்றார்.

## உலக திறன் விளையாட்டு போட்டி: ராம்கோ சிமெண்ட் ஊழியர் இரு பதக்கங்கள் வென்றார்




**சென்னை:** பாரா விளையாட்டு வீரர்களுக்கான உலக திறன் விளையாட்டு போட்டி தாய்லாந்தில் உள்ள நகோன் ராட்சசிமா நகரில் கடந்த 1-ம் தேதி முதல் 9-ம் தேதி வரை நடைபெற்றது. 48 நாடுகளை சேர்ந்த வீரர்கள் இதில் பங்கேற்றனர். இந்த போட்டியில் பங்கேற்ற ராம்கோ சிமெண்ட் பணியாளரான தினேஷ் ராஜையா 2 பதக்கங்கள் வென்றார்.

உலக திறன் விளையாட்டு போட்டிகளில் இந்தியா சார்பில் பாட்மிண்டன் போட்டியில் பங்கேற்ற தினேஷ் ராஜையா இரட்டையர் (எஸ்எல் 3 - எஸ்எல் 4) பிரிவில் வெள்ளிப் பதக்கமும், ஒற்றையர் பிரிவில் (எஸ்எல் 3) வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளார். பதக்கம் வென்றுள்ள தினேஷ் ராஜையாவுக்கு ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

தினேஷ் ராஜையாவின் பாட்மிண்டன் பயணம் கடந்த 2017-ம் ஆண்டு ராம்கோ நிறுவனத்துடன் தொடங்கி உள்ளது. இதன் பின்னர் உலக பாட்மிண்டன் கூட்டமைப்பு சார்பில் நடத்தப்பட்ட 9 சர்வதேச தொடர்களில் பங்கேற்றதினேஷ் ராஜையா 7 பதக்கங்கள் வென்றுள்ளார். இதில் தற்போது கைப்பற்றியுள்ள இரு பதக்கங்களும் அடங்கும்.

## உலக பாட்மிண்டன் தரவரிசை: அஸ்வினி - தனிஷா ஜோடி முன்னேற்றம்




**புதுடெல்லி:** உலக பாட்மிண்டன் கூட்டமைப்பு தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா - தனிஷா கிரஸ்டோ ஜோடி 4 இடங்கள் முன்னேறி 24-வது இடத்தை பிடித்துள்ளது. இந்த ஜோடி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குவாஹாட்டி மாஸ்டர்ஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்றிருந்தது. முன்னதாக கடந்த 3-ம் தேதி முடிவடைந்த சையது மோடி சர்வதேச பாட்மிண்டன் தொடரில் 2-வது இடம் பிடித்திருந்தது.

அடுத்தடுத்து இரு தொடர்களில் சிறந்த செயல் திறனைவெளிப்படுத்தியதன் மூலம்அஸ்வினி பொன்னப்பா - தனிஷா கிரஸ்டோ ஜோடி தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த ஜோடி 16 தொடர்களின் வாயிலாக 44,590 புள்ளிகளைபெற்றுள்ளது.